முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1144

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

16.11.2022, புதன்கிழமை

1. பிரணவக்குடில் படைத்த அரங்கா
   பிரணவ சித்திமிகு அரசா
   சரவணச்சுடரேற்றி உலகை மீட்க
   சற்குருவாய் அவதரித்த ஞான தேசிகா
2. தேசிகனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   தெரிவிப்பேன் ஞான அறிவுரை ஆசி
   (சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 30 ம் நாள் 16.11.2022 புதன்கிழமை)
   ஆசி தந்து உன்னுள் யானிருந்து
   ஆக்கமுடன் உலகை வழி நடத்தி
3. வழிநடத்தி அரங்கன் உன் சக்தி வழி
   வையகத்தை ஞானலோகமாக்குவேன்
   ஆக்கியே உலக மக்களெல்லாம்
   அவரவர் கர்ம வினை போக்கி
4. தேக்கமின்றி உன்னால் ஞானிகளாக
   தேற்றம் கண்டு உலகை மாற்றுகின்ற
   மாற்றுகின்ற மகா சக்தியை
   மகான் உன்னுள்ளே யான் விதைத்துள்ளேன்
5. உள்ளபடி உன்னை அறிந்து உணர்ந்து
   உலகோர் ஓங்காரக்குடில் நோக்கி
   வல்லமைபட வந்து இணைந்து விட்டால்
   வையகமே சடுதி மாற்றங்காணும்
6. காணுமப்பா வருகின்ற அன்பர்கட்கு
   கந்தவேலன் என் கருணையும் ஞானமும்
   ஞானமாக தானதர்ம சக்தியாக
   நம்பிக்கைபட வளர்ந்து சிறந்து இனிதே
7. இனிதே உலகமெங்கும் மாற்றம்
   இயம்பிடுவேன் அரங்கன் உன் அவதாரத்தின் நோக்கமாக
   கனிவேலவன் யான் நடத்தி
   கனியச்செய்வேன் ஞான ஆட்சிக்காலமாக
8. ஆகவே அற்புதங்கள் நடத்திடுவேன்
   அதிசயமாய் சடுதி இந்த உலகினில்
   ஏற்புகொண்டு உன்னை உலகமக்கள்
   இணைந்து உன்வழி ஞானிகளாக அருள்புரிவேன்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–